சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை.
தலைமைச் செயலகம்,
சென்னை–9.

கடித (நிலை) எண்.75, நாள் 04.12.2015

அனுப்புநர்
திரு. பொ.சிவசங்கரன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர் (முசூபொ)
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
தரமணி, சென்னை–600 113.

அய்யா,

பொருள் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – மலைப்பகுதி மற்றும் பெரும்பாலான பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் உள்ள/ஏற்படும் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் போது, இனசுழற்சி முறையிலிருந்து விலக்களித்து இப்பணியிடங்களை அம்மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்களைக் கொண்டு நிரப்புவதற்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநருக்கு அனுமதி வழங்குதல் – ஆணைகள் வெயிடப்படுகிறது.

பார்வை
1. அரசாணை (நிலை )எண்.142, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 06.07.2010
2. அரசாணை (நிலை )எண்.110, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 14.05.2012
3. விழுப்புரம் மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்ட நேரடி கடித எண்.777/ஏ2/2012, நாள் 08.08.2012.
4. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண்.10108/இ3–2/2010, நாள் 13.06.2014.
5. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ப.மே2) துறை கடித எண்.13484/பமே2/2014–4, நாள் 21.09.2015

+++++

மேலே 1–இல் படிக்கப்பட்ட அரசாணையில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டங்களில் காலியாக உள்ள சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியிடங்களை நிரப்பும்பொழுது இனசுழற்சி முறையினை பின்பற்றுவதற்கு உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே 2–இல் படிக்கப்பட்ட அரசாணையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் காலியாக உள்ள அங்கன்வாடி பணியிடங்களை நிரப்புவதற்கு, உரிய கல்வித்தகுதி, வயது வரம்பு, இட ஒதுக்கீட்டு முறை, பணியாளர் தேர்வு முறை, மையத்திலிருந்து தூரச்சுற்றளவு கடைபிடிப்பது மற்றும் பதவி உயர்விற்கான சதவிகிதம் ஆகியவற்றை பின்பற்றி பணியாளர்களை நியமனம் செய்வதற்கு நடைமுறைகளை வகுத்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே 3–வதாக படிக்கப்பட்ட கடிதத்தில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர், கல்வராயன் மலைபகுதியில் வசிக்கும் 99% மக்கள் பழங்குடியினர் வகுப்பை சேர்ந்தவர்களாக இருப்பதால், அப்பகுதியில் உள்ள அங்கன்வாடிப் பணியிடங்களை நிரப்புவதில் இனசுழற்சி முறையினை பின்பற்றுதல் கடினமாக உள்ளதாகவும், எனவே அப்பகுதிகளில் காலியாக உள்ள அங்கன்வாடிப் பணியாளர் பணியிடங்களை இனசுழற்சி முறையில் நிரப்புவதற்கு விலக்கு அளிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே 4–இல் படிக்கப்பட்ட கடிதத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர் தனது அறிக்கையில், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மலைப்பகுதி மற்றும் பெரும்பாலான பழங்குடியினர் வசிப்பிடங்களில் செயல்படும் அங்கன்வாடி மையங்கள் தொடர்பான விவரங்கள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில், அங்கன்வாடி மையங்களில் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் குழந்தைகளைத் (0–5+ வயது வரை) தொடர்ந்து கண்காணித்து, சத்துணவு மற்றுமுள்ள இணை சேவைகளை தினந்தோறும் வழங்க வேண்டியுள்ளது என்றும், பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் விதிமுறைகளில் வசிப்பிடம் அங்கன்வாடி மையத்திலிருந்து 3 கி.மீ.க்குள் இருக்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் (உரிய நபர்கள் இல்லாதபட்சத்தில் 10 கி.மீ வரை) மலைப்பகுதி மற்றும் பெரும்பாலான பழங்குடியினர் வசிப்பிடங்களில் இனசுழற்சி முறை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டுமாயின் அங்கன்வாடி மையங்களிலிருந்து 3கி.மீ முதல் 10கி.மீ. தூரத்திற்குள் உரிய இனங்களில் நபர்கள்/பணியாளர்கள் கிடைப்பது அரிதாகிறது என்றும் மலைப்பகுதி மற்றும் பெரும்பாலான பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அதே இடங்களில் வசிக்கும் பணியாளர்களால் மட்டுமே நாள்தோறும் பணிகளைச் செய்ய இயலும் என்று தெரிவித்துள்ளதோடு, மலைப் பகுதி மற்றும் பெரும்பாலான பழங்குடியினர் பகுதிகளில் உள்ள அங்கன்வாடிகளில் திட்டத்தினை செயல்படுத்துவதில் சுணக்கம் ஏற்படுகிறது என்பதால் மலைப்பகுதி மற்றும் பெரும்பாலான பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் செயல்படும் 348 அங்கன்வாடி மையங்களுக்கு மட்டும் அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் தேர்ந்தெடுக்கும்போது இனசுழற்சி முறையினை பின்பற்றுவதிலிருந்து விலக்களிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேலே 5–வதாக படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர், பழங்குடியின மக்களுக்கு வேலைவாய்ப்பில் 1% மட்டுமே வழங்கப்படுகிறது என்றும், அதிலும், இனசுழற்சி முறையில் 50–வது இடம் பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், பழங்குடியின மக்களுக்கு வேலைவாய்ப்பு கிட்டுவதற்கு மிகுந்த காலதாமதம் ஆகிறது. சிலசமயம் 3 தலைமுறைகள் காத்திருந்தும் அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. மேலும், மலைப்பகுதியில் உள்ள அங்கன்வாடி மையங்களில் பெரும்பாலும் பழங்குடியின பிள்ளைகளே பயனடைந்து வருவதால் அவர்களை கனிவுடனும் அன்புடனும் பார்த்துக் கொள்ள பழங்குடியின மக்களில் ஒருவரை அங்கன்வாடி மையத்தில் பணிநியமனம் செய்வதால் அங்கன்வாடி மையம் மேலும் சிறப்பாக செயல்படும் என்றும், பழங்குடியினர் நல இயக்குநரின் பரிந்துரையினை ஏற்றுக்கொண்டு, பழங்குடியின மக்கள் அதிகம் வாழும் 9 மாவட்டங்களில் மலைப்பகுதிகளில் செயல்படும் 348 அங்கன்வாடி மையங்களில் ஏற்படும் காலிப்பணியிடங்களை நிரப்பும்போது இனசுழற்சி முறையினை பின்பற்றுவதிலிருந்து

விலக்களித்து, இப்பணியிடங்களை அம்மலைப்பகுதியில் வாழும் தகுதியான பழங்குடியின மக்களை கொண்டு நிரப்புவதற்கு ஒப்புக் கொண்டுள்ளதோடு இவ்வாறு பணியிடங்கள் நிரப்புவதற்கு இத்துறைக்கு ஆட்சேபணை ஏதுமில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

6. மேலே பத்தி 4–இல் உள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநரின் செயற்குறிப்பினை கவனமான பரிசீலனைக்குப்பின் அரசு, ஏற்று கொண்டுள்ளது. அதன்படி விழுப்புரம், வேலூர், நாமக்கல், திருச்சி, நீலகிரி, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், தர்மபுரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 9 மாவட்டங்களில் மலைப்பகுதி மற்றும் பெரும்பாலான பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் உள்ள/ஏற்படும் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் போது, பங்களிப்பு மற்றும் இனசுழற்சி முறையிலிருந்து விலக்களித்து இப்பணியிடங்களை அம்மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்களைக் கொண்டு நிரப்புவதற்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடுகிறது.

7. இக்கடிதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் அ.சா.கு.எண்.18212/TD2/2015-1, நாள். 26.11.2015–இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

ஆர். எஸ். சுர்விழி
07/12/2015

அரசு முதன்மைச் செயலாளருக்காக

7/12/2015

நகல்

மாவட்ட ஆட்சியர், விழுப்புரம், வேலூர், நாமக்கல், திருச்சி, நீலகிரி, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், தர்மபுரி மற்றும் கன்னியாகுமரி

மாவட்ட திட்ட அலுவலர், விழுப்புரம், வேலூர், நாமக்கல், திருச்சி, நீலகிரி, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், தர்மபுரி மற்றும் கன்னியாகுமரி (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர் வழியாக)

அரசு செயலாளர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை–600 009.

இருப்பு கோப்பு/ உதிரி நகல்